# "உம்மில் நான் அன்புகூருகிறேன்" என்று தேவனிடத்தில் நீங்கள் எவ்விதம் கூறுகின்றீர்கள்? [12:1-8]

*"நான் உன்னில் அன்புகூருகிறேன்" என்பதை யாராவது ஒருவரிடத்தில் நீங்கள் எவ்விதம் கூறுகின்றீர்கள்?* மற்றவர்களின் மீதான நமது அன்பை எவ்விதம் வெளிக்காட்டுவது என்பதில் நாம் அனைவருமே போராடுபவர் களாகவே இருக்கின்றோம். நான் ஐந்து வயதாயிருந்த பொழுது என்னுடன் ஞாயிறு வேதாகமப் பள்ளியில் படித்த கேட்டி என்ற ஒரு சிறுமியின் மீது நான் மிகவும் அன்பாயிருந்தது பற்றி என் பெற்றோர்கள் என்னிடம் கூறியுள்ளனர். ஓரிரவில் நாங்கள் சபையிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கை யில், நான் காரின் முன்னிருக்கைப் பக்கமாய்ச் சாய்ந்து எனது அப்பாவிடம், "அப்பா, நீங்கள் யாரையேனும் நேசிக்கும் போது என்ன செய்வீர்கள்?" என்று கேட்டேன். அவரது பதில் எளிமையாகவும் ஒரு சிறு பையனுக்குக் கருத்துடையதாகவும் இருந்தது. அவர், "மகனே, நீ அந்தச் சிறுமிக்கு ஒரு மோதிரம் வாங்கித் தரலாம் என்று நான் எண்ணுகின்றேன்" என்றார். அவ்வாரத்தின் பிற்பகுதியில் எனது பெற்றோர் என்னை ஒரு கடைக்கு அழைத்துச் சென்றனர், அவர் கூறியதையே நாங்கள் செய்தோம்: நான் கேட்டிக்கு ஒரு பொம்மை மோதிரத்தை வாங்கி, அடுத்த முறை அவளை நான் பார்த்த பொழுது அதை அவளுக்குக் கொடுத்தேன்.

*"நான் உன்னில் அன்புகூருகிறேன்" என்பதை யாராவது ஒருவரிடத்தில் நீங்கள் எவ்விதம் கூறுகின்றீர்கள்?* புதன் கிழமை இரவுகளில் நான் நடத்தும் வேதபாட வகுப்புகளில் ஒருமுறை கல்லூரி மாணவர்களிடத்தில், அன்பு வெளிப்படுத்தப்பட்டதை அவர்கள் கண்டிருந்தது எவ்விதம் என்று நான் கேட்டேன். அவர்களில் ஒரு ஜோடி முந்திய வாரத்தில்தான் திருமணம் செய்ய நிச்சயித்துக் கொண்டிருந்தனர். அந்த ஆண் தனது மிகச் சிறந்த உடையை அணிந்து கொண்டு, அந்தப் பெண் ஒரு பெரிய பெண்கள் கூட்டத்தில் இருந்தபோது எவ்விதம் தன் "கேள்வியைச் சடாரென்று

*கேட்டார்" என்ற தங்கள் வரலாற்றைப் பகிர்ந்து கொண்டார்கள். அங்கு இருந்த எல்லார் முன்பாகவும், அவர் அப்பெண்மணியின் கையைப் பிடித்து, அவளுக்கு முன்பாக மண்டியிட்டு, தன்னை திருமணம் செய்து கொள்ளும்படி கேட்டார்! (அவள் "சரி!" என்று சொல்லி விட்டாள்.)*

*கல்லூரி மாணவர்கள் பலர் அவர்கள் மீது யாரோ ஒருவர் கொண்டுள்ள அன்பைத் தெரியப்படுத்துகின்ற சிறப்பு வாழ்த்து அட்டைகளைப் பெற்றிருந்தனர். ஒரு பெண், தனது தந்தை தம் மனைவி மீது கொண்டுள்ள அன்பைக் காண்பிக்க, அதிலும் விசேஷமாய் அவரது மனைவி சிரமமான வேலைகள் பெற்றிருக்கும் வாரத்தில் அவ்வாறு காண்பிக்க என்ன செய்தார் என்று கண்டிருந்ததை நினைவுகூர்ந்தாள். அவர் ஏதொன்றும் கூறாமல், இரகசியமாய் வீடு முழுவதையும் சுத்தம் செய்து விடுவார், இவ்விதமாய் அவர் தமது மனைவியின் வேலைப் பளுவில் சிலவற்றை எடுத்துப் போடுவார். தனது தாய், மகளின் மதிய உணவுப் பாத்திரத்தில் உள்ள வாழைப்பழங்களின் மீது பாசமிக்க குறிப்புகளை எப்பொழுதும் எழுதி வைப்பதை இன்னொரு மாணவி பகிர்ந்து கொண்டாள். ஒரு இளைஞன், தன்னை ஒரு கோடைகால ஊழியப் பயணத்திற்கு அனுப்புவதற்காக, கை வினைப் பொருட்களைச் செய்து விற்றதைப் பற்றிக் கூறினான், மற்றும் இன்னொரு மாணவி, தனது தந்தை தன் மகளுக்கு ஒரு பருவத்திற்கான கல்லூரிப் புத்தகங்கள் வாங்குவதற்காகத் தனது விலை உயர்ந்த துப்பாக்கியை விற்றதைப் பற்றிக் கூறினாள்.*

*"நான் உன்னில் அன்புகூருகிறேன்" என்று மக்கள் கூறுவதற்குப் பல மக்கள் இருப்பதால், பல வழிகள் உள்ளன, ஆனால் மிகவும் முக்கியமாக, தேவனிடத்தில் "நான் உம்மில் அன்புகூருகின்றேன்" என்று நீங்கள் எவ்விதம் கூறுகின்றீர்கள்? என்பது அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியாக உள்ளது, இதற்கு நமது வேத பாடப் பகுதியான 12:1-8ல் மரியாளால் பதில் அளிக்கப்பட்டது என்று நான் நம்புகின்றேன்.*

## *மரியாளின் பரிசு*

*நாம் படிக்கின்ற இவ்வரலாற்றின் நிகழ்ச்சிகள் யூதர்களின் பண்டிகை யான பஸ்காவுக்கு ஆறு நாட்கள் முன்னதாக நடைபெற்றன. இவ்விதமாக, இந்த நிகழ்ச்சிகள் இயேசுவின் வாழ்வின் கடைசி வாரத்தில் நடந்தவை களாய் இருந்தன. இயேசு கடைசி முறையாக கலிலேயாவில் இருந்து புறப்பட்டு தெற்குமுகமாய் எருசலேம் நோக்கிப் பயணமானார் என்று நான்கு சுவிசேஷங்களும் சுட்டிக்காட்டுகின்றன. இந்தக் குறிப்பிட்ட வேளையில், அவர் ஏற்கனவே எரிகோவைக் கடந்து வந்திருந்தார், அங்கு அவர் சகேயுவை எதிர்கொண்டிருந்தார் (லூக். 19:1-10). இது ஒரு அபாயகரமான பயணம் என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருந்தார்கள் (11:8), இயேசு தாம் மரிப்பதற்காகவே எருசலேம் சென்று கொண்டிருந்ததை அறிந்திருந்தார்.*

*மரியாள், மார்த்தாள் மற்றும் லாசரு ஆகியோரின் சொந்த ஊரான*

பெத்தானியாவுக்கு இயேசு வந்தார். இவ்வேளையில் அவர் தமக்கு மரியாதை செய்விப்பதற்காகத் தரப்பட்ட ஒரு இரவு விருந்தில் கலந்து கொண்டார்.[1] விருந்தினர்களின் மத்தியில் லாசருவும் இருந்தார் என்று நமக்குக் கூறப்படுகின்றது. இந்த இரவு விருந்தில் கலந்து கொண்ட விருந்தினர்களின் பெயரட்டவணையைக் கற்பனை செய்து பாருங்கள். அது, ''மரித்த லாசரு'' மற்றும் ''குஷ்டரோகியாய் இருந்த சீமோன்'' ஆகியோரை உள்ளடக்கியிருந்தது, ஒருவேளை, "பார்வையற்றவராயிருந்த யாக்கோபு" மற்றும் "மூடவராயிருந்த யோசுவா" ஆகியோரும் கூட கலந்து கொண்டிருப்பார்கள். அவ்விருந்தில் இருந்த ஒவ்வொருவருமே, தங்கள் வாழ்வை இயேசு எவ்விதம் மாற்றியிருந்தார் என்பதைக்கூற வரலாறு ஒன்றைக் கொண்டிருந்திருக்கலாம். கடினமாய் உழைப்பவளும், லாசருவின் சகோதரியுமாகிய மார்த்தாள் விருந்தினர்களுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

இரவு விருந்து வேளையில், மரியாள் இயேசுவிடம் வந்தாள். இவளை நாம், லாசருவின் இரு சகோதரிகளில் அதிகம் உணர்வுக் கிளர்ச்சியுள்ள வளென்றும், தனது சகோதரனின் மரணத்தைத் தொடர்ந்து இயேசு பெத்தானியாவுக்கு வந்த பொழுது, அவரது பாதத்தில் விழுந்து அழுதவள் என்றும் நாம் நினைவுகூருகின்றோம். அவளுக்கு இயேசு ஒரு நல்ல நண்பராகவும், ஆச்சரியமான போதகராகவும், அற்புதமான சுகமளிப்பவ ராகவும் இருந்தார் - அவர் அவளுடைய மிகுந்த ஆழமான வேதனையை அவளது மாபெரும் மகிழ்ச்சியாய் மாற்றிய மனிதராக இருந்தார். அவரைப் பற்றிய அவளது உணர்வானது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாததாக இருந்தது. அவர் அவ்வளவு பெரியவராக, அவ்வளவு பரிசுத்தமானவராக, அவ்வளவு நெருக்கமானவராக இருந்தார் - மற்றும் அவர் மரிப்பதற்காக எருசலேமுக்குச் சென்று கொண்டிருந்தார்! மரியாள் இந்தச் சிந்தனைகள் யாவற்றையும் தன் இருதயத்தில் கொண்டவளாய், இரட்சகரை அபிஷேகம் செய்தாள்.

"அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலை மயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது" (12:3) என்று யோவான் பதிவு செய்தார். நளதம் அல்லது இலாமிச்சை எனப்படும் இது வட இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மிகவும் விலை உயர்ந்த நறுமணத்தைலம் ஆகும். அது அநேகமாக, அலபாஸ்டர் என்ற மிகத் தெளிவான பளிங்குக் கல்லினால் செய்த ஜாடி ஒன்றில் வைத்து முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும். அந்த நறுமணத் தைலத்தை எடுப்பதற்கு, அந்த ஜாடியின் கழுத்துப் பகுதியை உடைக்க வேண்டும், ஆகவே அதை முற்றிலுமாகப் பயன்படுத்த வேண்டியதாக இருந்தது. மரியாள் இயேசுவின் பாதத்தில் ஊற்றிய தைலம் முன்னூற்று இருபது கிராம் அளவு அந்த ஜாடியில் இருந்ததாக யோவான் பதிவு செய்தார். சாதாரணமாக அது, ஒரு சிறப்பு நிகழ்ச்சியின் போது வரும் விருந்தினர்கள் பலருடைய தலைகளில் அபிஷேகம் செய்யப் பயன்படுத்தப்

படுவதாயிருந்தது. அதற்குப் பதிலாக, மரியாள் அதை முழுவதும் இயேசுவின் பாதங்களில் ஊற்றி, அவரது பாதங்களைத் தனது கூந்தலினால் துடைக்கலானாள். இயேசுவுக்கு, "நான் உம்மில் அன்புகூருகிறேன்" என்று கூறப் பெருவிருப்பமாய் உள்ள எவராலும் தரக்கூடிய அழகு மிக்க பரிசாக இது இருந்தது.

மரியாள் அளித்த இப்பரிசின் பல பண்புகள் அதை மிகச் சிறப்பான தாக்கின. முதலாவது, அது மட்டுமீறிய செலவீனமாய் இருந்தது. அந்தத் தைலத்தை ஒரு சாதாரணத் தொழிலாளியின் ஓராண்டுச் சம்பளத்திற்குச் சமமான பணத்திற்கு விற்க முடியும் என்று குறிப்பிட்டு யூதாஸ் அவளது செயல்களுக்கு மறுப்புத் தெரிவித்தான் (12:4, 5). பணத்தொகைகள் ஒரு காலத்திலிருந்து இன்னொரு காலத்துக்கும், ஒரு கலாச்சாரத்திலிருந்து இன்னொரு கலாச்சாரத்திற்கும் மாற்றப்படுவது என்பது கடினமாய் இருப்பினும், ஓராண்டிற்கான கூலியின் முக்கியத்துவத்தை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும்! யூதாஸைப் போன்ற கடின இருதயம் கொண்டவர்களுக்கு மட்டுமீறிய இப்பரிசானது எவ்வித கருத்தறிவையும் ஏற்படுத்தவில்லை.

இரண்டாவது மரியாளின் பரிசானது அவளைப் பற்றிய சிந்தனை யின்றிக் கொடுக்கப்பட்டது. சில வேளைகளில் நாம் பரிசுகள் கொடுக்கை யில் பரிசுகளைப் பெறுபவர்களைப் பற்றி சிந்தனையிலும் அதிகமாய் நம்மைப் பற்றிச் சிந்திப்பவர்களாய் அப்பரிசினைக் கொடுக்கின்றோம். "இது போதுமா?"; "இதை அவர்கள் விரும்புவார்களா?"; "அவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?" என்றெல்லாம் நாம் வியப்படைகின்றோம். இருப்பினும் மரியாளைப்பற்றிய ஒவ்வொரு விஷயமும், இந்தக் கேள்விகளில் எதுவும் அவளுடைய சிந்தையில் இருந்ததில்லை என்றே சுட்டிக்காட்டுகின்றது. அவள் இயேசுவைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டவளாயிருந்து, ''போதகருக்காக'' மட்டுமே தனது மாபெரும் அன்பைக் காட்டுபவளாயிருந்தாள். அவள் தனது (தலை) முடியைத் தரையில் அவிழ்த்து விட்டாள் என்பது, மரியாள் தன்னைப் பற்றி மிகவும் கொஞ்சமாக நினைத்துக் கொண்டிருந்தாள் என்பதைக் குறிப்பதாயிருந்தது. அந்தக் காலத்தில் இருந்த எந்த யூதப் பெண்ணும் இப்படிச் செய்ய மாட்டாள், ஆனால், "யார் அதைப் பற்றிக் கவலைப் படுகின்றார்? இயேசு ஒருவரே பொருட்படுத்தப்படக் கூடியவராக இருக்கின்றார்'' என்பதே மரியாளின் எண்ணப்போக்காக இருந்ததாய்க் காணப்படுகின்றது.

மூன்றாவது, மரியாளின் பரிசானது தாழ்மையினால் உறையிடப் பட்டதாய் இருநத்து. அவள் இயேசுவின் தலையை அல்ல, ஆனால் அவருடைய கால்களையே அபிஷேகம் செய்வித்தாள், அவருடைய பாதங்களைத் துடைப்பதற்கு அவள் ஒரு துண்டை அல்ல ஆனால் அதற்குப் பதில் தனது (தலை) முடியையே பயன்படுத்தினாள். மரியாளைப் பொறுத்தமட்டில் கௌரவம் என்பது ஒரு பிரச்சனையாய் இருந்ததில்லை. இயேசுவின் மீதுள்ள அன்பை வெளிப்படுத்துவது என்பதே பொருட் படுத்தப் படுவதாய் இருந்தது.

கடைசியாக, முன்னூற்றிருபது கிராம் நளதமல்ல ஆனால் மரியாளின்

சொந்த இருதயமே அவளது பரிசாக இருந்தது. நாம் அன்புகூரும் சிலருக்குச் சிலவேளைகளில் நாம் மலர்கள், மோதிரங்கள், உடைகள் அல்லது பணம் ஆகியவற்றைக் கொடுக்கின்றோம். ஒவ்வொரு நிகழ்விலும், நாம் கொடுக்கும் பொருளானது அப்பரிசைக்காட்டிலும் பெரியதான சிலவற்றை அடையாளப்படுத்துகின்றது; அது நாம் வெளிப்படுத்த முயற்சி செய்யும் அன்பிற்காக நிலைநிற்கின்றது. மரியாளின் நறுமணத்தைலமும் இதே போன்றுதான் இருந்தது. அவள், நாசரேத்திலிருந்து வந்த தனது சிறந்த நண்பரில் அன்புகூர்ந்தாள் என்று இயேசுவுக்கும் மற்றவர்களுக்கும் கூறுவதற்கு அந்தத் தைலமானது நறுமணமிக்கதொரு வழிமுறையாய் இருந்தது.

## நமது பரிசு

மரியாளுடையதைப் போன்ற ஒரு பரிசை இன்றைய நாட்களில் நாம் எவ்விதத்தில் கொடுக்கின்றோம்? "உம்மில் நான் அன்புகூருகிறேன்" என்று நாம் தேவனிடத்தில் எவ்வாறு கூறுகின்றோம்? அப்படிப்பட்ட ஒரு உறவுக்கு எவ்வகையான பரிசு ஏற்புடையதாக உள்ளது? வேத வசனங்களில் ஆச்சரியம் நிறைந்த பரிசுக் கருத்துக்கள் ஏராளமாய் நிறைந்துள்ளன!

தொடங்குவதற்கு, நாம் நம் இருதயங்களை அவருக்குத் தரமுடியும். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக" (மத். 22:37) என்பதே இயேசுவைப் பொறுத்தமட்டில் மாபெரும் கட்டளையாக உள்ளது. ஆல்ஷெய்மர் நோயினால் பாதிக்கப்பட்ட மனைவியை உடையவரான இராபர்ட்சன் மெக்குயில்க்கன் அவர்களின் வாழ்வின் உண்மை அனுபவமானது, தேவனுக்கு நமது இருதயங்களைக் கொடுப்பது என்றால் என்ன என்பதன் திசையை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது. மெக்குயில்க்கன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> குருமடக் கழகத்தார், நான் தினமும் அலுவலகம் செல்ல இயலும்படியாக, எங்கள் வீட்டில் ஒரு துணையாளர் தங்கியிருக்கும்படி ஏற்பாடு செய்தனர். அந்த இரு ஆண்டுகளில் மியூரியலை வீட்டில் பாதுகாப்பது என்பது மிகவும் கடினமாகிக் கொண்டே வந்தது. நான் கிளம்பிச் சென்றவுடனே, அவளும் என்னைப் பின் தொடர்வது உண்டு. என்னுடன் இருக்கையில் அவள் மன நிறைவடைந்தாள்; நானில்லாமல் இருந்தால் அவள் சலிப்படைந்து, சிலவேளைகளில் பயத்தினால் தாக்கப்பட்டவளாய் இருந்தாள். பள்ளிக்குச் சென்று வரும் மொத்த தூரம் ஒருமைல் ஆகும். அவள் ஒரு நாளில் 10 முறை பள்ளிக்குப் போய் மீண்டும் திரும்பி வருவாள்.
>
> சில வேளைகளில் இரவில், அவள் உடைமாற்ற நான் உதவும் பொழுது, அவளது இரத்தம் தோய்ந்த பாதங்களை நான் காண்பதுண்டு. அதைப் பற்றி நான் எங்கள் குடும்ப மருத்துவரிடம் கூறிய பொழுது, அவர் திணறிப் போனார். "அப்படிப்பட்ட அன்பு" என்று மட்டுமே அவர் கூறினார். பின்பு ஒரு கணம் கழித்து அவர், "ஆண்டுகள் பல ஆகும்போது பண்புகள் (மாற்றம் பெற்று) வளர்ந்தேறி, சில

வேளைகளில் இவ்வாறு நடக்கின்றது என்ற கோட்பாடு உள்ளது" என்றார். தேவனை நான் அவ்விதமாய் - எல்லா வேளைகளிலும் அவரை நெருங்கியிருப்பதில் அதிக ஏக்கம் கொண்டு - அன்புகூர வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.[2]

"உம்மில் நான் அன்புகூருகின்றேன்" என்று தேவனிடத்தில் கூறுவதில் மிகத் தெளிவான வழிகளில் ஒன்று அவரிடத்தில் அதைச் சொல்வது ஆகும். இதை நாம் தனிப்பட்ட ஜெபத்திலும், ஆராதிக்க ஒன்று கூடுகையிலும் செய்கின்றோம். இதை நாம் கர்த்தரிடத்தில் எவ்வாறு வெளிப்படுத்துவது என்று சங்கீதங்கள் நமக்குப் போதிக்கின்றன. நாம் சங்கீதக்காரரைப் போலச் செய்கின்றோம்: "இராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிப்பேன். நாடோறும் உம்மை ஸ்தோத்தரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன்" (சங். 145:1, 2).

அமெரிக்க ஐக்கிய நாடானது ஈராக்கிற்கு எதிராக யுத்தம் செய்யச் சென்ற பொழுது, ஆபரேஷன் டெஸர்ட் ஸ்டார்ம் என்ற அந்த யுத்த நிகழ்வின் காலத்தில், ஸ்காட் ஸ்பெய்ச்செர் என்ற ஒரு இளம் வான் படைவீரர் அந்தப் போரில் கொல்லப்பட்டார், அவருக்கு ஒரு மனைவியும் இரு சிறு பிள்ளைகளும் இருந்தனர். அவரது மரணத்திற்கு ஒரு சில வாரங்களுக்குப் பின்பு, அவருடைய சொந்தப் பொருட்கள் அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டன. அவைகளில், அவர் மரணமடைவதற்கு முந்திய நாள் அவரால் எழுதப்பட்டிருந்த ஒரு கடிதமும் இருந்தது, அதைத் தபாலில் அனுப்புவதற்கு அவருக்கு நேரம் இல்லாது போயிற்று. அதில் அவர் தம் ஒவ்வொரு குழந்தைக்கும் சில விஷயங்களை எழுதியிருந்தார், மற்றும் அக்கடிதத்தை அவர் தம் மனைவிக்கு எழுதிய பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு முடித்திருந்தார்: "நீயே என் வாழ்வின் மையப் பொருளாய் இருக்கின்றாய். உன்னுடன் வாழ்வதில் நான் முழுமையான திருப்தியடைந்தவனாய் இருக்கின்றேன். நான் இறந்து விட்டால், நீ மீண்டும் நேசிக்கக் கற்றுக் கொள்."[3] சிலவேளைகளில், நமது அன்பைப் பற்றிப் பேசுவது என்பது மாபெரும் பரிசாக இருக்க முடியும்!

மற்றவர்களிடத்தில் அன்புகூருதல் என்பது தேவன் மீதான நமது அன்பைச் செயல் விளக்கப்படுத்துகின்றது. நம்மை நாம் அன்பு செய்வது போல நமது அயலாரையும் அன்புகூர வேண்டும் என்பது பழைய ஏற்பாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு கருத்தாகவும், இரண்டாவது பெரிய கட்டளையாக இயேசுவால் குறிப்பிடப்பட்டதாகவும் உள்ளது.[4] ஒரு கணவர் தம் பிள்ளைகள் மீது அன்புகூர்வதால் தம் மனைவி மீது தாம் கொண்டுள்ள அன்பைத் தெரியப்படுத்துவது போலவே, நாம் நமது சக மனிதரை அன்புகூருவதன் மூலம் தேவன் மீது நமக்குள்ள அன்பைத் தெரியப்படுத்துகின்றோம். நாம் ஒருவரை ஒருவர் அன்புகூருவதன் மூலம் தேவனிடத்தில் "உம்மில் நான் அன்புகூருகிறேன்" என்று சொல்லுகின்றோம்.

நாம் தேவனைப் பற்றி மற்றவர்களிடத்தில் பேசுவதன் மூலமாகவும்

தேவனிடத்தில் நமக்குள்ள அன்பை நாம் வெளிப்படுத்த முடியும் என்றும் வேத வசனங்கள் அறிவிக்கின்றன. இது ''அறிக்கையிடுதல்'' என்று அழைக்கப்படுகின்றது. இயேசு பின்வருமாறு கூறினார்:

> மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் (மத். 10:32, 33).

தேவன் மீதான நமது அன்பை நாம் மற்றவர்களிடத்தில் கூறும் பொழுது, அது தேவனுக்கு, ''நான் உம்மில் அன்புகூருகின்றேன்'' என்று கூறும் இன்னொரு வழியாக உள்ளது.

தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பதே அநேகமாக நாம் தேவனிடத்தில் "நான் உம்மில் அன்புகூருகின்றேன்" என்று கூறுவதற்கான மிகக் கடினமான வழிமுறையாக - மற்றும் நாம் கர்த்தரை உண்மையிலேயே அன்பு கூரவிரும்பினால், நாம் தவிர்க்க முடியாத ஒரு வழிமுறையாக - உள்ளது. ''நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல'' (1 யோவா. 5:3) என்று யோவான் எழுதினார். சிலவேளைகளில் மக்கள் உண்மையில் இதைக் கேட்க விரும்புவதில்லை, ஆனால் அவரைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால் நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

கீழ்ப்படிதலில் நமக்கு உள்ள தெளிவான மற்றும் நடைமுறைக் கடினத்தின்/சிரமத்தின் இயல்பானது ஒரு மனிதர் மற்றும் அவருடைய மனைவி பற்றிய பின்வரும் கதையில் காணப்படுகின்றது. அம்மனிதர் மிகவும் தீவிரமான நோய்வாய்ப்பட்டிருந்தார், எனவே அவரது மனைவி அவரது கணவரின் நிலைமை பற்றிப் பேசுவதற்காக ஒரு மருத்துவரிடம் சென்றாள். அவர்கள் தனிமையில் பேசுகையில், அப்பெண்ணிடம் மருத்துவர், ''உங்கள் கணவர் ஒவ்வொரு நாளும் வீட்டில் சமைத்த ஆரோக்கியமான சத்துணவை மூன்று வேளைகளுக்குச் சாப்பிடாவிட்டால், அவர் இறந்து விடுவார். மேலும் வாழ்வில் அவருக்குள்ள அழுத்தத்தைக் குறைப்பதற்கு நீங்கள் அவரிடம் எப்பொழுதும் மகிழ்ச்சியும் இரக்கமும் அன்பும் காட்ட வேண்டியது அவசியம். கடைசியாக, நோய்க் கிருமிகளை எதிர்க்கும் சக்தி அவரிடம் குறைந்துள்ளதால், வீட்டை எப்பொழுதும் துப்புரவாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்வதும் அவருக்கு இன்றியமையாதது ஆகும்" என்று கூறினார். அந்தப் பெண் வீடு திரும்பிய பொழுது, அவளிடத்தில் மருத்துவர் என்ன கூறியிருந்தார் என்பதை அறிய அவளது கணவர் அதிகம் ஆவல் கொண்டவராய் இருந்தார். அந்த மனைவி அவரிடத்தில், "நீங்கள் சாகப் போகிறீர்கள் என்று மருத்துவர் கூறினார்" என்று அறிக்கை தந்தாள்! தேவனிடத்தில் அன்பு என்பது நாம் தேவன் மீது அன்பு கொண்டுள்ளோம் என்று கூறுவதை விட மேலானது ஆகும்; அது நாம் நமது பெற்றோர், துணைவர், அல்லது பிள்ளைகளை நேசிப்பது என்பது அன்புள்ள வார்த்தைகளைப் பேசுவதைக் காட்டிலும் அதிகமானதாக

உள்ளது போலவே, நாம் தேவனுக்குக் கீழ்ப்படிதல் அடங்கியுள்ளதாகும்.

நாம் தேவனிடத்தில், "நான் உம்மில் அன்பு கூருகின்றேன்" என்று கூற இவை ஒரு சில வழிகளாய் உள்ளன. தேவன் நம்மிடத்தில், "நான் உன்மேல் அன்புகூருகின்றேன்'' என்று எவ்விதம் கூறுகின்றார் என்பதை நீங்கள் அறிவீர்களா?

## தேவனுடைய பரிசு

மரியாள் இயேசுவுக்கு அபிஷேகம் செய்து, அவர் இரவு விருந்தை விட்டுப் புறப்பட்ட பின்னர், இயேசு எருசலேமை நோக்கிப் பயணமானார். அவர் தாம் எங்கு செல்கின்றோம் என்பதையும், தாம் என்ன செய்கின்றோம் என்பதையும் அறிந்திருந்தார். இதுவே தமது கடைசிப் பயணம் என்பதை அவர் அறிந்திருந்தார், மற்றும் யூதத்தலைவர்கள் தம்மைக் கொலை செய்ய நோக்கமாய் இருந்ததையும் அவர் அறிந்திருந்தார். அவரது மரணம் என்பது ஒரு தற்செயலான நிகழ்ச்சியாய் இருக்கப் போவதில்லை. முன்பே அவர் பின்வருமாறு கூறியிருந்தார்:

> நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ள மாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன்; அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக் கொண்டேன் (யோவா. 10:17, 18).

நாம் பெற்றுக் கொண்டுள்ளவைகளிலேயே மாபெரும் பரிசை இவ்வுலகிற்குக் கொடுப்பதற்காக, இயேசு பெத்தானியாவில் இருந்து மனவிருப்பத்துடனேயே கிளம்பினார்! ஓரிரு நாட்களுக்குள்ளாகவே இயேசு இந்த உலகத்தின் பாவங்களுக்காகச் சிலுவையில் மரிப்பார். இயேசுவுக்கு மரியாளின் பரிசு அற்புதமானதாக இருந்தாலும், சிலுவையில் அவர் தம் ஜீவனையே தந்த பேரளவான பரிசின் முன் அவளது பரிசு ஒளி மங்கியே காணப்படுகின்றது!

## முடிவுரை

இயேசுவின் மரணத்தைத் தொடர்ந்து, அவரது உடலானது, ஒரு கல்லறையில் வைக்கப்பட்டது, அங்கிருந்து மூன்று நாட்களுக்குப் பின் அவர் உயிர்த்தெழுந்தார். இயேசு, ''நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்'' (ரோமர் 4:25) என்று பவுல் எழுதிய பொழுது, இந்த நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தைத் தொகுத்துரைத்தார். பல வழிகளில் - ஆனால் சிறப்பாக இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்ற வகையில் - "நான் உன் மீது அன்புகூருகின்றேன்" என்று நம் தேவன்

ஒவ்வொருவருக்கும் கூறுகின்றார். இதற்கு முன்பு யோவான், "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா. 3:16) என்று எழுதிய பொழுது யோவான் சுவிசேஷமானது இத்தொடர்பை முன்னமே ஏற்படுத்தியது.

நீங்கள் தேவன் மேல் அன்பாயிருக்கின்றீர்களா? ஆம் என்றால், இப்பொழுது அந்த அன்பை நீங்கள் எவ்விதத்தில் தெரியப்படுத்திக் கொண்டிருக்கின்றீர்கள்? நீங்கள் பாவத்திலிருந்து திரும்பி கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் உங்களின் அன்பை விளக்கப்படுத்த வேண்டியிருக்கலாம் (அப். 2:38). நீங்கள் ஒருமுறை தேர்ந்து கொண்ட உங்கள் விசுவாசத்திலிருந்து இப்பொழுது விலகியிருந்தால், அந்த விசுவாசத்திற்கு நீங்கள் மீண்டும் திரும்புவதன் மூலம் உங்கள் அன்பை நீங்கள் வெளிப்படுத்த வேண்டியிருக்கலாம். நீங்கள் தேவனிடத்தில் "நான் உம்மில் அன்புகூருகின்றேன்" என்று கூறுவதால் மட்டுமே உங்கள் அன்பை வெளிப்படுத்துவது அவசியமாய் இருக்கலாம். மரியாள் இவ்வழியில் முன் செல்கின்றாள். இன்று நீங்கள் கர்த்தரிடத்தில், "நான் உம்மில் அன்பு கூருகின்றேன்" என்று சொல்வீர்களா?

---

குறிப்புகள்

[1]மத்தேயு 26:6 மற்றும் மாற்கு 14:3 ஆகியவற்றில், இந்நிகழ்ச்சி தொழு நோயாளியாய் இருந்த சீமோனின் வீட்டில் நடைபெற்றதாக உள்ளது. [2]Robertson McQuilken, "Repaying a Four-Year Debt," *Leadership* (Summer 1993): 43. [3]Jerry D. Twentier, *The Positive Power of Praising People* (Nashville: Thomas Nelson Publishers, 1994), n.p. [4]லேவியராகமம் 19:18; மத்தேயு 22:39.